# கூடலூர் (கோ) நகராட்சி

2024-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் (05.12.2024)-ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 04.45 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட பொருளின் தீர்மான விவரம்.

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | நகர்மன்ற பெருள் வரிசை எண் மற்றும் பொருள் விவரம் | தீர்மானம் எண் / தீர்மான விவரம் |
|---|---|---|
| 05.12.2024 | <u>பொருள் எண்:01</u><br>கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டம், நெ.02, கூடலூர் வடக்கு கிராமம். புல எண் 1273 நெ.காலை "தமிழ்நாடு பூமிதான வாரியம், சென்னை -5" என்ற வகைப்பாட்டில் அமைந்த 3.13.50 ஹெக்டர் பூமியில் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் 72 நபர்களுக்கு அரசால் வீட்டுமனை விநியோக பத்திரம் வழங்குவது தொடர்பாக கிராம பொது மக்களுக்கு ஆட்சேபனை ஏதும் இருப்பின், இவ்வறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பெரியநாயக்கன்பாளையம் நில வருவாய் ஆய்வாளரிடமோ அல்லது கோயம்புத்தூர் வடக்கு வருவாய் வட்டாட்சியரிடமோ நேரில் ஆஜராகியோ அல்லது எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டியது. அவ்வாறு 15 தினங்களுக்குள் ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில், ஆட்சேபனைகளை ஏதும் இல்லை எனக்கருதி இலவச வீட்டுமனைப்பட்டா வீட்டுமனை விநியோக பத்திரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை கூடலூர் வடக்கு கிராம மக்களுக்கு தெரிவிக்கப்பட்டது என்பது மன்றத்தின் பார்வைக்கு.<br>**அலுவலக குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 3076 /2024/எப்1)** | தீர்மானம் எண்.708.<br>பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்:02**<br>கோயம்புத்தூர் மாவட்டம், வடக்கு வட்டம், கூடலூர் வடக்கு கிராமம், புல எண் 969/2.3 ஆகிய தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தினை நத்தமான வகைப்பாடு மாற்றம் செய்து 216 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கி கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவரால் உத்திரவிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி பட்டா வழங்கிய நாளது வரை எவரும் வீடுகட்டி குடியில்லை எனவும், பயனாளிகள் எவரும் வீடுகட்டி குடியேறாமல் நிபந்தனை மீறப்பட்டுள்ளது எனவும், மேற்படி வழங்கப்பட்ட பட்டாவினை ரத்து செய்வதற்கும், தற்போது தகுதியுள்ள 162 பயனாளிகளை கண்டறிந்து மேற்படி புல எண்ணில் பட்டா வழங்கிட ஏதுவாக முன்மொழிவுகளை அனுப்பிவைக்குமாறு பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கூடலூர் நகராட்சி தரப்பிலிருந்து மேற்படி பட்டா வழங்குவதில் ஆட்சேபனை ஏதும் உள்ளதா என்பதும், ஆட்சேபனைகள் ஏதும் இல்லையென்றால் மேற்படி கூடலூர் வடக்கு கிராமம், புல எண் 969/23 நெ.காலையில் இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குதல் தொடர்பான தீர்மானம் நகராட்சி மன்றத்தின் பார்வைக்கு<br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**(ந.க.எண்.2959/2024/எப்1)** | தீர்மானம் எண்.709,<br>பார்வையிடப்பட்டு<br>அங்கீகரிக்கப்படுகிறது. |

ஒம்/-அ.அறிவரசு
நகர்மன்ற தலைவர்,
கூடலூர்(கோ)நகராட்சி.

/ உண்மை நகல் /

3/1/25
ஆணையர்,
கூடலூர்(கோ)நகராட்சி.

3.1.2025